[2019] 7 எஸ்.சி.ஆர்.309

அசோக்சின்ஹ ஜெயந்திரசின்ஹ

–எதிர்–

குஜராத் மாநில அரசு

(குற்றவியல் மேல்முறையீடு எண் 1123/2010)

மே 7, 2019

[மாண்புமிகு நீதியரசர் திருமதி. ஆர். பானுமதி மற்றும்

மாண்புமிகு நீதியரசர் திரு. எஸ். அப்துல் நசீர்]

தண்டனைச் சட்டம், 1860 – பிரிவு 302 உடனினணந்த பிரிவு 34, பிரிவு 307 உடனிணைந்த பிரிவு 34 – மேல்முறையீட்டாளர் – 1ம் குற்றஞ்சாட்டப்பட்டவர் உட்பட குற்றஞ்சாட்டப்பட்ட நபர்கள் பிரச்சினைக்குரிய சாலையை உழுதுவந்தனர் என்றும், அதற்காக புகார்தாரருக்கும் குற்றஞ்சாட்டப்பட்ட நபர்களுக்கும் இடையே உரிமை வழக்கு நிலுவையில் இருந்து வந்தது என்பதே அரசுத்தரப்பு வழக்காகும் – உழவு செய்து வந்தது குறித்து புகார்தாரரும் அவரது குடும்பத்தினரும் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு எதிர்ப்பு தெரிவித்தபோது, அவர்கள் கொடுமைபடுத்தப்பட்டனர் – எனவே புகார்தாரரும் அவரது குடும்பத்தினரும் அவர்களது வீட்டிற்கு திரும்பிச் சென்றனர் – இதற்கிடையில், துப்பாக்கிகள் மற்றும் தடிகள் போன்ற ஆயுதங்களுடன் குற்றஞ்சாட்டப்பட்ட நபர்கள் அவர்களது வீட்டிற்கு சென்றனர், 1 மற்றும் 2ம் எதிரிகள் 3 முறை துப்பாக்கியால் சுட்டனர், அது பலியானவர் – மரணமுற்றவரின் (அ.சா.5ன் மனைவி) அ.சா.6 மற்றும் அ.சா.7 – ஆகியோரின் மீது பட்டு, அ.சா.5ன் மனைவி நிகழ்விடத்தில் இறந்தார் – முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது – காயமடைந்த கண்ணுற்ற சாட்சிகளின் (அ.சா.6 மற்றும் அ.சா.7) சாட்சியத்தை பரிசீலித்து, ஆயுதங்களை கைப்பற்றி, பதிவுருக்கலில் உள்ள மற்ற சான்றுகளை கருத்தில் கொண்ட விசாரணை நீதிமன்றம் மேல்முறையீட்டாளர் – 1ம் குற்றஞ்சாட்டப்பட்டவர் மற்றும் 2ம்

குற்றஞ்சாட்டப்பட்டவர் ஆகியோரை இ.த.ச. பிரிவு 302 உடனிணைந்த பிரிவு 34, இ.த.ச. பிரிவு 307 உடனிணைந்த பிரிவு 34 ஆயுதங்கள் சட்டம் பிரிவு 25(சி) மற்றும் பட்டியல் வகுப்பினர் மற்றும் பட்டியல் பழங்குடியினர் (வன்கொடுமை தடுப்புச்) சட்டம், 1989, பிரிவு 3 (1)(x) ஆகியவற்றின் கீழ் தண்டனை தீர்பளித்தது – உயர் நீதிமன்றம் 2ம் குற்றஞ்சாட்டப்பட்டவரை விடுதலை செய்தது, ஆயினும் மேல்முறையீட்டாளர் – 1ம் குற்றஞ்சாட்டப்பட்டவரின் தண்டனையை இ.த.ச. பிரிவுகள் 302, 307 உடனிணைந்த பிரிவு 34 மற்றும் ஆயுதங்கள் சட்டம் பிரிவு 25(சி) ஆகியவற்றின் கீழ் உறுதிசெய்தது – மேல்முறையீட்டில், முடிவு: சம்பவமானது புகார்தாரின் விவசாய நிலத்தின் இருள் சூழ்திருந்தபோது நடந்தது – அங்கு வெளிச்சம் குறித்த எந்த சான்றும் இல்லாததால், விவசாய நிலத்தில், இருள் சூழ்திருந்த சமயத்தில் குற்றஞ்சாட்டப்பட்டவரை அடையாளம் காண்பது என்பது சந்தேகத்திற்குரியதாக உள்ளது – துப்பாக்கியால் யார் சுட்டனர் என்பது குறித்த அரசுத்தரப்பு வழக்கில் முரண்பாடுகள் உள்ளன – மேலும், தோட்டாவினாலா அல்லது குண்டினாலா காயம் ஏற்பட்டது என்பது குறித்தும், சுழல் துப்பாக்கியாலா அல்லது கைத்துப்பாக்கியாலா காயம் ஏற்பட்டது என்பது குறித்தும், அ.சா.1 மருத்துவர் தனது அறிக்கையில் குறிப்பிடவில்லை – 1ம் மற்றும் 2 குற்றஞ்சாட்டப்பட்டவரிடமிருந்து ஆயுதங்களை கைப்பற்றியதற்கான பஞ்சநாமா சாட்சிகளான (அ.சா.ஆ.79) பிறல் சாட்சியாக மாறியுள்ளதால், ஆயுதங்களை கைப்பற்றப்பட்டது குறித்து உறுதியூட்டுகின்ற தனித்து இயங்கும் மூலம் ஏதுமில்லை – எனவே குற்றஞ்சாட்டப்பட்டவரின் குற்றம், நியமான காரணங்களுக்கு அப்பால் நிரூபிக்கப்படவில்லை – மேலும் மேல்முறீட்டாளர் – 1ம் குற்றஞ்சாட்டப்பட்டவரின் தண்டனையை உறுதிசெய்த உயர் நீதிமன்றத்தின் எதிர்பிற்குள்ளான தீர்ப்புரை நீக்கரவு செய்யப்படுகிறது.

முடிவு: சம்பவமானது புகார்தாரர் சோமாபாய் ரூபாபாய் (அ.சா.3)ன் விவசாய நிலத்தின் 23.11.1997 அன்று பிற்பகல் 9.00 மணிக்கு இருள் சூழ்திருந்தபோது நடந்தது என்பதாகும். புகார்தாரர் வீட்டின் பின்புறத்தில் அமைந்துள்ள

விலங்குகளின் கூடாரத்தில் மின்விளக்கு இருப்பதாகவோ அல்லது அதை சுற்றிலும் எந்த ஒரு மின்கம்பங்கள் இருப்பதாகவோ அல்லது தண்ணீர் விநியோகிக்கப்படும் கிணற்றில் விளக்கு இருந்ததாகவோ சம்பவம் இடந்த இடத்தில் பஞ்சநாமாவான (அ.சா.ஆ.73)ல் குறிப்பிடுகின்றது. மேல்முறையீட்டாளரும், மற்ற 6 குற்றம்சாட்டப்பட்டவர்களும் புகார்தாரரை சுற்றி வளைத்தனர் என்றும், 3 துப்பாக்கி சூடுகள் நடத்தப்பட்டது என்பதே அரசுத் தரப்பின் வழக்காகும். காயமுற்ற சாட்சியான (அ.சா.ஆ.6) தனது குறுக்கு விசாரணையில் விலங்குகளின் கூடாரத்தில் விளக்கு எறிந்துகொண்டிருந்தது குறித்தோ அல்லது அதன் அருகாமையில் விளக்கு இருந்தது குறித்தோ ஏதுவும் குறிப்பிடவில்லை என்று ஒப்புக்கொண்டார். மின்விளக்கு போன்ற எந்த சான்றும் இல்லாத பட்சத்தில், புகார்தாரரின் விவசாய நிலத்தில், குறிப்பாக இரவு 9.00 மணி இருளில் குற்றஞ்சாட்டப்பட்டவரை அடையாளம் காண்பது என்பது சந்தேகத்திற்குரியதாக உள்ளது. 23.11.1997 அன்று நிலவொளி இருந்ததா என்பதைக் குறித்து எந்த சான்றோ அல்லது நிலவொளியின் உதவியுடன் மேல்முறையீட்டாளரையும் மற்ற உடன் குற்றவாளிகளையும் புகார்தாரர் அடையாளம் கண்டுள்ளார் என்பதை அவர் புகாரில் குறிப்பிடவோ இல்லை என சுட்டிக்காட்டப்பட்டது. போதுமான வெளிச்சம் இருந்தது குறித்த எந்த சான்றும் இல்லாத பட்சத்தில், மேல்முறையீட்டாளர் குற்றஞ்சாட்டப்பட்டவரை அடையாளம் கண்டுகொண்டார் என்ற அவரது வெளிப்படையான செயல் சந்தேகத்திற்குரியதாக உள்ளது. (பத்தி 10)

2. குரல்வளையின் முறிவு காரணமாக சுவாசிப்பதில் கடினம் ஏற்பட்டு மரணம் ஏற்பட்டது என்று (அ.சா.1) கூறியுள்ளார். சடலக்கூறுாய்வு சான்றிதழான அ.சா.ஆ.52 ல், மேற்படி காயமானது துப்பாக்கி தோட்டாவினாலோ அல்லது சிறு குண்டினாலோ ஏற்பட்டிருக்கும் என்று குறிப்பிடவில்லை. அ.சா.1, சுழல் துப்பாக்கி மற்றும் இரட்டை குழல் துப்பாக்கி ஆகிய பொருட்களை கைப்பற்றியதை தாம் காணவில்லை என்று ஒப்புக்கொண்டார். எந்த ஆயுதத்தின் காயங்கள் காரணமாக மரணம் விளைந்தது என்பதற்கான குறிப்பிட்ட சான்று ஏதும் இல்லாத பட்சத்தில்,

மேல்முறையீட்டாளரிடமிருந்து சுழல் துப்பாக்கி கைப்பற்றப்பட்டதன் பேரில் அவர்தான் அதற்கு காரணம் என்று கூறுமுடியாது. (பத்தி 12)

3. 1ம் மற்றும் 2ம் குற்றஞ்சாட்டப்பட்டவரின் வாக்குமூலத்திலிருந்து, 1ம் குற்றஞ்சாட்டப்பட்டவரின் வீட்டிலிருந்துதான் சுழல் துப்பாக்கி கைப்பற்றப்பட்டது என்றும், அது ஒற்றை சுழல் துப்பாக்கியாகும் என்பது அரசுத்தரப்பின் வழக்காகும். அதேபோன்று சடலக்கூறுாய்வு சான்றிதழ் (அ.சா.ஆ.52)ல் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது போல், 2ம் குற்றஞ்சாட்டப்பட்டவரின் வீட்டிலிருந்துதான் இரட்டை சுழல் துப்பாக்கி கைப்பற்றப்பட்டது. அதில், குத்துக்காயம் இருந்ததாக குறிப்பிடப்பட்டிருந்தது. சடலக்கூறுாய்வு சான்றிதழில், சுடப்பட்ட காயமானது சுழல் துப்பாக்கியாலா அல்லது கைத்துப்பாக்கியாலா ஏற்பட்டது என்பது குறித்து குறிப்பிடப்படவில்லை. மரணத்தை விளைவித்த காயங்கள் சுழல் துப்பாக்கியாலா அல்லது இரட்டை சுழல் துப்பாக்கியாலா ஏற்பட்டது என்பது தெளிவாக குறிப்பிடப்படாதபட்சத்தில், மரணமுற்றவரான சோமிபென்னின் உடலில் மரணத்தை விளைவித்த சுடப்பட்ட காயங்களுக்கு மேல்முறையீட்டாளர் – 1ம் குற்றஞ்சாட்டப்பட்டவர் பொறுப்பாவார் என்று நீதிமன்றங்கள் தீர்மானித்திருக்கக் கூடாது. (பத்தி 13)

4. காவல்துறை அலுவலரான விசாரணை அதிகாரி, வெடிக்கும் ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டது குறித்து கூறியுள்ளார். காவல்துறை அலுவலரின் சான்றுரையில் சில உள்ளார்ந்த குறைபாடுகள் உள்ளன என்பதன் பேரில், அதை புறக்கணிக்க வேண்டும் என்பதான சட்ட விதிகள் ஏதுமில்லை. இரு ஆயுதங்களான அதாவது சுழல் துப்பாக்கி மற்றும் கைத்துப்பாக்கி ஆகியவை முறையே 1 மற்றும் 2ம் குற்றஞ்சாட்டப்பட்டவர்களால் பயன்படுத்தப்பட்டதாக கூறப்படுகின்ற தற்போதைய வழக்கின் சங்கதிகள் மற்றும் சூழ்நிலைகள், தனிப்பட்ட மூலத்திலிருந்து ஆயுதங்கள் கைப்பற்றப்பட்தை உறுதியூட்ட வேண்டும் என செயலறிவு விதி கோருகிறது. பஞ்சநாமா சாட்சிகளான (அ.சா.ஆ.79) பிறல் சாட்சியாக மாறியிருக்கும்

பட்சத்தில், ஆயுதங்களை கைப்பற்றியது குறித்து மற்ற மூலங்களிலிருந்து உறுதியூட்டும்படி நீதிமன்றம் கோரப்படுகிறது. (பத்தி 14)

5. சம்பவம் நடந்த சமயத்தில், நிகழ்விடத்தில் இருள் சூழ்திருந்ததால், தாக்குதல் செய்தவரை அடையாளம் காண சாட்சிகளுக்கு கடினமாக இருந்தது. மரணம் ஏற்படுத்திய துப்பாக்கி சூடு குறித்து கண்ணுற்ற சாட்சிகளின் சாட்சியத்தில் முரண்பாடுகள் இருந்தது. நியாயமான சந்தேகத்திற்கு அப்பால், குற்றஞ்சாட்டப்பட்டவரின் குற்றம் நிரூபிக்கப்படாததால், குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு சந்தேகத்தின் பலன் அளிக்கப்பட்டுள்ளது. (பத்தி 16)

மகேஷ் தத்தாத்ரே தீர்த்கர் –எதிர்– மகாராஷ்டிர மாநில அரசு (2009) 11 எஸ்.சி.சி. 141 : [2009] 3 எஸ்.சி.ஆர். 1122 – குறித்துக் காட்டப்பட்டது.

<u>பார்வையிடப்பட்ட தீர்முடிவுகள்</u>

[2009] 3 எஸ்.சி.ஆர். 1122 ..... பத்தி 17

குற்றவியல் மேல்முறையீட்டு அதிகார வரம்பு : குற்றவியல் மேல்முறையீடு எண் 1123/2010.

குற்றவியல் மேல்முறையீடு எண் 10/2001ல் அஹமதாபாத்திலுள்ள குஜராத் உயர் நீதிமன்றத்தில் 05.03.2009 தேதியிடப்பட்ட தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணையிலிருந்து எழுகிறது.

<u>வழக்குரைஞர்கள்:</u>

திரு. அனுஜ் பந்தாரி, செல்வி. திஷா பந்தாரி, அபிநவ் ஸ்ரீவாஸ்தவா, செல்வி. ருச்சி கோலி..... மேல்முறையீட்டாளருக்காக

செல்வி. ஹேமந்திகா வாஹி, செல்வி. ஜெசால் வாஹி. செல்வி. விஷாகா... எதிர்மேல்முறையீட்டாளருக்காக

இந்நீதிமன்றத்தின் தீர்ப்புரையானது மாண்புமிகு நிதியரசர் திருமதி. ஆர். பானுமதி அவர்களால் பகரப்பட்டது.

1. இந்த மேல்முறையீடானது அகமதாபாத்திலுள்ள குஜராத் உயர்நீதிமன்றத்தின் 05.03.2009 தேதியிடப்பட்ட குற்றவியல் மேல்முறையீடு எண் 10/2001 லிருந்து எழுகிறது, அதில் அந்த உயர்நீதிமன்றம் இ.த.ச. பிரிவு 302 உடனிணைந்த பிரிவு 34–இன் படி மேல்முறையீட்டாளர் எதிரி எண்.1 குற்றவாளி என உறுதிசெய்து, அவருக்கு ஆயுட்கால சிறைத்தண்டனை விதித்தது. உயர்நீதிமன்றம் இ.த.ச பிரிவு 307 உடனிணைந்த பிரிவு 34 மற்றும் ஆயுதங்கள் சட்டம் பிரிவு 25 (சி) ஆகியவற்றின் கீழ் அவர் குற்றவாளி என உறுதிசெய்து தண்டனை விதித்தது. 1989, பட்டியல் வகுப்பினர் மற்றும் பட்டியல் பழங்குடியினர் (வன்கொடுமைத் தடுப்புச்) சட்டத்தின் பிரிவு 3(1)(x)–ன் கீழான குற்றத்திற்காக மேல்முறையீட்டாளரை உயர்நீதிமன்றம் விடுதலை செய்தது.

2. இந்த மேல்முறையீட்டிற்கு வழிகோளும் சங்கதிகளின் சுருக்கம்:

அதாவது, எதிரி எண் 1 முதல் 5, அவர்களின் வேலையாள் எதிரி எண் 6 மற்றும் ஒரு எதிரி 23.11.1997 அன்று இரவு 9.00 மணியளவில் அவர்களாக கூடினார்கள். புகார்தாரர் சோமாபாய் ரூபாபாய் (அ.சா.3) எதிரி எண் 1 மற்றும் 3 க்கு எதிராக தாக்கல் செய்த உரிமையியல் வழக்கு முறையான வழக்கு எண் 131/1997 ல் மொடாசா உரிமையியல் நீதிபதி முன்பு நிலுவையிலுள்ள பிரச்சனைக்குரிய சாலையை டிராக்டர் மூலம் உழத் தொடங்கினர். அரசுத்தரப்பின் கூற்றுப்படி, மேற்கண்ட சாலையானது புகார்தாரரும் அவரது குடும்ப உறுப்பினர்களும், போக வர பயன்படுத்தப்பட்டது. நிகழ்வு நாளன்று, அதாவது 23.11.1997 இரவு 9.00 மணியளவில், எதிரிகள் சாலையை உழுதுகொண்டிருந்தபோது, புகார்தாரரும்

அவரது குடும்ப உறுப்பினர்களும் தலையிட்டு, அவர்களது உழும் நடவடிக்கைகளை தடுத்தார்கள், அதனால் எதிரிகள், புகார்தாரரையும் அவரது குடும்ப உறுப்பினர்களையும் சாதியைக் குறிப்பிட்டு திட்ட தொடங்கினார்கள். புகார்தாரரும் மற்றும் அவரது குடும்ப ஊறப்பினர்களும் பயத்தின் காரணமாக நிகழ்வு நடந்த இடத்தின் அருகில் இருந்த அவர்களது வீடுகளுக்கு திரும்பி சென்றுவிட்டனர். இதனிடையே மேல்முறையீட்டாளர்/எதிரி எண் 1 அசோக்கிஸ் ஜெயந்திரசிங் மற்றும் எதிரி எண் 2 காலுசிஸ் என்கிற ஹர்பால்சிங் துப்பாக்கிகளுடனும், எதிரி எண்.4 பால்பத்ராசிஸ் கம்புடனும், எதிரி எண்.3 காலேந்திரசிஸ், டிராக்டர் ஓட்டிக்கொண்டுருந்தவரும் அங்கே வந்தனர். அதன்பிறகு எதிரி எண்.1 மற்றும் 2 மூன்றுமுறை துப்பாக்கியால் சுட்டனர். அது அ.சா.5 ஹரிபாய் மனைவி இறந்துபோன சோமிபென், அ.சா.6 ராமன்பாய், அ.சா.7 நந்தாபென் ஆகியோரைத் தாக்கியது, அதன் காரணமாக சோமிபென் நிகழ்விடத்திலேயே இறந்துவிட்டார் மற்றும், அ.சா.6 மற்றும் அ.சா.7 காயமடைடந்தனர். அதன்பிறகு அனைத்து எதிரிகளும் நிகழ்வு நடந்த இடத்திலிருந்து ஓடிவிட்டார்கள். புகார்தாரர் (அ.சா.3) தாக்கல் செய்த புகார் மனுவின் அடிப்படையில் 24.11.1997 அன்று, முதல் தகவல் அறிக்கையானது அனைத்து எதிரிகளுக்கும் எதிராக இ.த.ச. பிரிவுகள் 302, 307, 120 பி உடனிணைந்த பிரிவு 34 இ.த.ச. பிரிவுகள் 143, 147, 148, 149, 506 (ii) 323 மற்றும் 504 இ.த.ச பிரிவு 25 (சி) ஆயுதங்கள் சட்டம் மற்றும் பிரிவு 3(1) (x) பட்டியல் வகுப்பினர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்பு) சட்டம் 1989 இன் படி, பதிவு செய்யப்பட்டது.

3. விசாரணை முடிவுற்ற நிலையில், இ.த.ச. பிரிவுகள் 302 மற்றும் 307, 120 பி உடனிணைந்த பிரிவு 34 இ.த.ச பிரிவுகள் 143, 147, 148, 149, 506 (ii) 323 மற்றும் 504 மற்றும் ஆயுதங்கள் சட்டம் பிரிவு 25(சி) பட்டியல் பிரிவினர் மற்றும் பட்டியல் பழங்குடியினர் (வன்கொடுமை தடுப்புச்) சட்டப்படி பிரிவு 3(1)(x) ஆகியவற்றின் கீழ் மேல்முறையீட்டாளர் மற்ற எதிரிகளுக்கு எதிராக முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது.

4. குற்றச்சாட்டப்பட்டவரின் குற்றத்தை வெளிக்கொணர விசாரணை நீதிமன்றமானது நான்கு கண்ணுற்ற சாட்சிகளான, அதாவது, புகார்தாரர் – சோமாபாய் ரூபாபாய் (அ.சா.3), ஹரிபாய் சோமாபாய் (அ.சா.5) மற்றும் காயமடைந்த கண்ணுற்ற சாட்சிகளான – ராமன்பாய் முல்லாபாய் ரங்ஜிபாய் (அ.சா.6) மற்றும் நந்தா பென் ஹரிபாய் (அ.சா.7), மரணமுற்ற சோமிபென்னின் உடலில் சடலக்கூறாய்வு நடத்திய டாக்டர் ரோகித் குமார் (அ.சா.1), காயமுற்ற சாட்சிகளையும் பிற சாட்சிகளையும் பரிசோதித்த டாக்டர் தேஸ்முக் ஹீராலால் (அ.சா.4) ஆகியேரை விசாரித்தது. காயமடைந்த கண்ணுற்ற சாட்சிகளான (அ.சா.6 மற்றும் 7) ஆகியோரின் சாட்சியத்தை பரிசீலித்ததன் பேரிலும், ஆயுதங்களை கைப்பற்றியும் பதிவுருக்களின் மற்ற சான்றுகளின் அடிப்படையிலும், இ.த.ச, பிரிவு 302 உடனிந்த பிரிவு 34–ன் கீழ் மேல்முறையீட்டாளர் – 1ம் எதிரி மற்றும் 2ம் எதிரி ஆகியோரை 15.11.2000 தேதியிடப்பட்ட அதன் தீர்ப்புரை மூலம் குற்றவாளி என தீர்மானித்த விசாரணை நீதிமன்றம், ஒவ்வொருவருக்கும் ரூ.5000/–ம் அபராதத்தை விதித்ததுடன் ஆயுள் தண்டனை வழங்கியது. மேலும் ஆயுதங்கள் சட்டம் பிரிவு 25(சி)ன் கீழான குற்றத்திற்காக ஒவ்வொருவருக்கும் ரூ.500/–யை அபராதமாக விதித்ததுடன் 3 ஆண்டுகால கடுஞ்சிறை தண்டனையை அனுபவிக்கவும், 1989 பட்டியல் வகுப்பினர் மற்றும் பட்டியல் பழங்குடியினர் (வன்கொடுமை தடுப்புச்) சட்டத்தின் பிரிவு 3(1)(x)ன் கீழ் ஒவ்வொருவருக்கும் ரூ.500/– அபராதத்துடன் 6 மாதகால கடுஞ்சிறைத் தண்டனையும் விதித்து தீர்பளித்தது. விசாரணை நீதிமன்றம், இ.த.ச. பிரிவுகள் 147, 148, 149, 323, 504 மற்றும் 506 (ii) ஆகியவற்றின் கீழ் 1ம் மற்றும் 2ம் எதிரிகளை விடுதலை செய்தது. விசாரணை நீதிமன்றம் 3 முதல் 7 வரையிலான எதிரிகளை அனைத்து குற்றச் சாட்டுகளிலிருந்தும் விடுவித்தது. அதில் பாதிப்படைந்த மேல்முறையீட்டாளர் 1ம் எதிரி மற்றும் 2ம் எதிரி – காலுசிங் ஆகியோர் உயர்நீதிமன்றத்தின் முன்பு குற்றவியல் மேல்முறையீடு எண் 10/2001–யை தாக்கல் செய்தனர். 3 முதல் 7 வரையிலான உடன் குற்றவாளிகளின் விடுதலையை எதிர்த்து எதிர்மேல்முறையீட்டாளரான மாநில அரசு,

உயர்நீதிமன்றத்தின் முன்பு குற்றவியல் மேல்முறையீடு எண் 127/2000–த்தை தாக்கல் செய்தது. 05.03.2009 தேதியிடப்பட்ட பொதுத் தீர்ப்புரை மூலம், உயர்நீதிமன்றம் இ.த.ச. பிரிவுகள் 302 மற்றும் 307 உடனிணைந்த பிரிவு 34 மற்றும் ஆயுதங்கள் சட்டம் பிரிவு 25(சி) ஆகியவற்றின் கீழ் மேல்முறையீட்டாளர் – 1ம் எதிரியின் தண்டனை தீர்ப்பை உறுதி செய்தது. 1989, பட்டியல் வகுப்பினர் மற்றும் பட்டியல் பழங்குடியினர் (வன்கொடுமை தடுப்புச்) சட்டம் பிரிவு 3(1)(x)ன் கீழ் மேல்முறையீட்டாளரை விடுதலை செய்த உயர்நீதிமன்றம், 2ம் எதிரி – காலுசிங்கிற்கு சந்தேகத்தின் பலனை அளித்து அவரை அனைத்து குற்றச் சாட்டுகளிலிருந்தும் விடுதலை செய்தது. அதே தீர்ப்புரை மூலம் எதிர்மேல்முறையீட்டாளர் – மாநில அரசால் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டை உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

5. அவரது மேல்முறையீட்டை தள்ளுபடி செய்ததில் பாதிப்புற்ற மேல்முறையீட்டாளர் – 1ம் எதிரி இந்த மேல்முறையீட்டை தாக்கல் செய்தார். 2ம் எதிரி காலுசிங்கின் விடுதலையை எதிர்த்து எதிர்மேல்முறையீட்டாளர் – மாநில அரசு, குற்றவியல் மேல்முறையீடு எண் 1125/2010–யை தாக்கல் செய்தது, அது 02.05.2019 தேதியிட்ட உத்தரவு மூலம் தள்ளுபடி செய்யப்பட்டது.

6. மேல்முறையீட்டாளரின் சார்பாக முன்னிலையான கற்றறிந்த வழக்குறைஞர் திரு.அனோஜ் பந்தாரி, சம்பவமானது 23.11.1997 அன்று 9.00 மணியளவில் புகார்தாரர் – சோமாபாய் ரூபாபாய் (அ.சா.3)ன் விவசாய நிலத்தில் நடந்தது என்றும், புகார்தாரர் மற்றும் சாட்சிகள் தாக்குதல் செய்தவரை அடையாளம் காட்டுவதற்கு சம்பவம் நடந்த சமயத்தில் மின்விளக்குகள் எறிந்துகொண்டிருந்ததற்கான எந்த சான்றுமில்லை என்றும், விளக்கு இருந்தது குறித்து முக்கியமான சான்று இல்லாததன் காரணமாக தாக்குதல் செய்தவரின் அடையாளம் குறித்து சாட்சிகள் அளித்த சாட்சியத்தின் மீது சார்வுற முடியாது என்றும் சமர்பித்தார். இரண்டு பஞ்சநாமா சாட்சிகளான அதாவது முக்கேஷ் குமார்

பிரான்லால் சேத் (அ.சா.12) மற்றும் ராமன்பாய் ஹீராபாய் பஞ்சால் (அ.சா.17) ஆகியோர் பஞ்சநாமா (அ.சா.ஆ.89)க்கு ஆதரவு அளிக்கவில்லை, மேலும் மேல்முறையீட்டாளர்களிடமிருந்து ஆயுதங்கள் கைபற்றியதற்கான சான்றுகள் இல்லாததால் இறந்தவர் சோமிபின் அடைந்த மரணத்தை விளைவித்த காயம் மேல்முறையீட்டாளரால் செய்யப்படவில்லை என்று சமர்பிக்கப்பட்டது. சடலக்கூறாய்வு சான்றிதழில் (அ.சா.ஆ.52)ல் டாக்டர் ரோகித் குமார் (அ.சா.1), குத்துக்காயங்கள் இருந்ததாகவும், அக்காயங்கள் சுழல் துப்பாக்கியால் அல்லது கைத்துப்பாக்கியால் எற்பட்ட காயங்களா என்பது குறித்து தெளிவாக தெரிவில்லை என்று பணிந்துரைத்தார். காயங்கள் கைத்துப்பாக்கியாள் அல்லது சுழல் துப்பாக்கியாள் ஆகிய எந்த ஆயுதத்தை கொண்டு எற்பட்டது என்பது குறித்து எந்த குறிப்பிட்டசான்றும் இல்லாததன்பேரில் இ.த.ச. பிரிவுகள் 302 உடனினிந்த 34 இ.த.ச. பிரிவுகள் 307 உடனினிந்த பிரிவு 34 மற்றும் ஆயுதங்கள் சட்டம் பிரிவு 25 (சி) ஆகியவற்றின் கீழ் நீதிமன்றம், மேல்முறையீட்டாளர் – 1ம் எதிரியை தண்டித்திருக்க கூடாது என்று கூறி மேல்முறையீட்டாளர் – 1ம் எதிரிக்கு சந்தேகத்தின் பயனை அளிக்குமாறு வேண்டுரைக்கப்பட்டது.

7. எதிர்மேல்முறையீட்டாளர் – மாநிலத்திற்கான முன்னிலையான கற்றறிந்த வழக்குறைஞர் செல்வி ஜீசால் வாஹீ விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்புரைக்குள்ளும், எதிர்பிற்குள்ளான தீர்ப்புரைக்குள்ளும் எங்களை இட்டுச்சென்றதுடன், காயமுற்ற கண்ணுற்ற சாட்சிகள் (அ.சா.6 மற்றும் 7) ஆகியோரின் சாட்சியம், புகார்தாரர் – சேமாபாய் ரூபாபாய் (அ.சா.3) மற்றும் பிற கண்ணுற்ற சாட்சியான ஹீராபாய் (அ.சா.5) ஆகியயோரின் சாட்சியம் நம்பத்தகுந்ததும் என்றும், அவை ஒத்துப்போவதாக உள்ளது என்றும், கீழமை நீதிமன்றம் மேல்முறையீட்டாளர் – 1ம் எதிரியை தண்டித்தது சரியே என்றும், அந்த ஒருங்கியல்வான காண்முடிவுகளில் தலையிட வேண்டியதில்லை என்றும் பணிந்துரைத்தார்.

8. நாங்கள், எதிர்–எதிர் வாதங்களை கவனமாக பரிசீலித்ததுடன், விசாரணை நீதிமன்றத்தின் எதிர்பிற்குள்ளான தீர்ப்புரை மற்றும் பதிவுருக்களின் பிற சான்றுகளையும் நுண்ணாய்வு செய்தோம்.

9. அரசுத்தரப்பு வழக்குபடி, சம்பவத்தின் உள்நோக்கமானது, 1ம் எதிரிக்கு சொந்தமான தீம்தா கிராமத்தில் உள்ள அளவை எண் 95ல் உள்ள சாலையின் உடமை குறித்த பிரச்சனையாகும். புகார்தாரர் சோமாபாய் ரூபாபாய் (அ.சா.3) 4 எக்கர் மற்றும் 22 குண்டா அளவிலான நிலம் தெடர்பாக 1ம் மற்றும் 3ம் எதிரிகளுக்கு எதிராக, மேடாசாவிலுள்ள உரிமையியல் நீதிமன்றத்தில் முறையான உரிமை வழக்கு எண் 131/1997–யை தாக்கல் செய்தார். மேற்படி உரிமை வழக்கில் நீதிமன்றமானது 16.10.1998 தேதியிடப்பட்ட உத்தரவு (அ.சா.ஆ.5) மூலம் "உள்ள நிலை" என உத்தரவிட்டது. மேற்சொன்ன உத்தரவான "உள்ள நிலை" என்பதை எதிர்த்து, எதிரி சி.எஃப்.ஓ எண் 67/1998–யை தாக்கல் செய்து, அவ்வித்திரவின் நகல் அ.சா.ஆ.126 ஆக குறியீடு செய்யப்பட்டது. அளவை எண் 95 கொண்ட நிலத்தின் அனுபோகத்தை பொறுத்தவரையில், தரப்பினர்களுக்கு இடையே விரோதம் இருந்து வந்தது, எனவே அரசுத்தரப்பு அந்த உட்கருத்தை நிருபித்துள்ளது. உட்கருத்தின் நிருபணம், விசாரணை நீதிமன்றத்தாலும், உயர்நீதிமன்றத்தாலும் ஒரு முக்கிய அம்சமாக கருதப்பட்டது. உட்கருத்தானது தொடர்புடைய அம்சமாக இருந்தாலும், உட்கருத்து இருமுனை கொண்ட ஆயுதமாக கருதப்படவேண்டும். கண்ணுற்ற சாட்சிகளின் சான்றிற்கு உட்கருத்தின் நிருபணம் மட்டுமே மதிப்பை கூட்ட முடியும்.

10. சம்பவமானது புகார்தாரர் சோமாபாய் ரூபாபாய் (அ.சா.3)ன் விவசாய நிலத்தின் 23.11.1997 அன்று பிற்பகல் 9.00 மணிக்கு இருள் சூழ்திருந்தபோது நடந்தது என்பதாகும். புகார்தாரர் வீட்டின் பின்புறத்தில் அமைந்துள்ள விலங்குகளின் கூடாரத்தில் மின்விளக்கு இருப்பதாகவோ அல்லது அதை சுற்றிலும் எந்த ஒரு மின்கம்பங்கள் இருப்பதாகவோ அல்லது தண்ணீர்

விநியோகிக்கப்படும் கிணற்றில் விளக்கு இருந்ததாகவோ சம்பவம் இடந்த இடத்தில் பஞ்சநாமாவான (அ.சா.ஆ.73)ல் குறிப்பிடுகின்றது. மேல்முறையீட்டாளரும், மற்ற 6 குற்றம்சாட்டப்பட்டவர்களும் புகார்தாரரை சுற்றி வளைத்தனர் என்றும், 3 துப்பாக்கி சூடுகள் நடத்தப்பட்டது என்பதே அரசுத் தரப்பின் வழக்காகும். காயமுற்ற சாட்சியான (அ.சா.ஆ.6) தனது குறுக்கு விசாரணையில் விலங்குகளின் கூடாரத்தில் விளக்கு எறிந்துகொண்டிருந்தது குறித்தோ அல்லது அதன் அருகாமையில் விளக்கு இருந்தது குறித்தோ ஏதுவும் குறிப்பிடவில்லை என்று ஒப்புக்கொண்டார். மின்விளக்கு போன்ற எந்த சான்றும் இல்லாத பட்சத்தில், புகார்தாரரின் விவசாய நிலத்தில், குறிப்பாக இரவு 9.00 மணி இருளில் குற்றஞ்சாட்டப்பட்டவரை அடையாளம் காண்பது என்பது சந்தேகத்திற்குரியதாக உள்ளது. 23.11.1997 அன்று நிலவொளி இருந்ததா என்பதைக் குறித்து எந்த சான்றோ அல்லது நிலவொளியின் உதவியுடன் மேல்முறையீட்டாளரையும் மற்ற உடன் குற்றவாளிகளையும் புகார்தாரர் அடையாளம் கண்டுள்ளார் என்பதை அவர் புகாரில் குறிப்பிடவோ இல்லை என சுட்டிக்காட்டப்பட்டது. போதுமான வெளிச்சம் இருந்தது குறித்த எந்த சான்றும் இல்லாத பட்சத்தில், மேல்முறையீட்டாளர் குற்றஞ்சாட்டப்பட்டவரை அடையாளம் கண்டுகொண்டார் என்ற அவரது வெளிப்படையான செயல் சந்தேகத்திற்குரியதாக உள்ளது.

11. புகார்தாரர் – சோமாபாய் ரூபாபாய் (அ.சா.3)ஆல் தாக்கல் செய்யப்பட்ட புகாரில், மேல்முறையீட்டாளர்/1ம் குற்றஞ்சாட்டப்பட்டவர் – அசோக்சின்ஹ ஜெயந்திரசின்ஹ மற்றும் 2ம் குற்றஞ்சாட்டப்பட்டவர் கலுசின்ஹ ஆகியோர் அவர்களது கைத்துப்பாக்கியிலிருந்து 3 தோட்டக்களை வெடிக்கச் செய்தனர் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. அவ்வாறு இருக்கையில் நீதிமன்றத்தின் முன்பான வாக்குமூலத்தில், "கலுசின்ஹ 3 முறை சுட்டு அது நந்தாபென் மற்றும் ராமன்பாய் ஆகியோரை காயப்படுத்தியது" என்று குறிப்பிட்டுள்ளார். நீதிமன்றத்தில் குறிப்பிடப்பட்டுள்ள புகார்தாரரின் வழக்குப்படி மொத்தமாக 3 துப்பாக்கி சூடுகள் சுடப்பட்டதாகவும், அவை மூன்றுமே 2ம் குற்றஞ்சாட்டப்பட்டவரான கலுசின்ஹால் சுடப்பட்டன என்பதாகும். மேல்முறையீட்டளாருக்கான கற்றறிந்த வழக்கறிஞர்,

அந்த துப்பாக்கிச்சூட்டை யார் செய்த என்ற அரசு தரப்பின் வழக்கில் முரண்பாடுகள் உள்ளன என்றும், சந்தேகத்தின் பலனானது மேல்முறையீட்டாளருக்கு அளிக்கப்படவேண்டும் என்றும், சரியாக வாதிட்டார்.

12. டாக்டர் ரோகித் குமார் (அ.சா.1), மரணமுற்ற சோமிபென்னின் சடலத்தில் சடலக்கூறாய்வு நடத்தினார். சடக்கூறாய்வு சான்றிதழான (அ.சா.ஆ.52)ன் படி (அ.சா.1) பின்வரும் காயங்களை குறிப்பிட்டுள்ளார்:–

(i) மார்பின் காம்புக்கு மேல் நெஞ்சின் இடது புறத்தில் 0.5 செ.மீ. குறுக்களவு கொண்ட ஒரு உள்நோக்கிய காயம்.

(ii) கழுத்தின் இடது புறத்தை சுற்றிலும் 0.5 செ.மீ. அளவுகொண்ட குத்துக்காயம்.

(iii) அந்த (i)வது காயமானது பின்புறத்தில் ஊடுறுவிச் சென்று, முதுகுத் தண்டுவடத்தின் வலது தோள்பட்டையில் 1 செ.மீ. குறுக்களவு கொண்ட வெளியேறும் காயமாக உள்ளது. பின்புறத்தில் 1 வது காயம் வெளியேறும் அளவில் 5 ம் விலாஎலும்பு முறிக்கப்பட்டிருந்தது. 2 வது காயம் வெளியேறும் அளவில், இடது நெஞ்சுப்பகுதியின் பின்பகுதியின் 7 வது விலா எலும்பு முறிக்கப்பட்டிருந்தது.

குரல்வளையின் முறிவு காரணமாக சுவாசிப்பதில் கடினம் ஏற்பட்டு மரணம் ஏற்பட்டது என்று (அ.சா.1) கூறியுள்ளார். சடலக்கூறுாய்வு சான்றிதழான அ.சா.ஆ.52 ல், மேற்படி காயமானது துப்பாக்கி தோட்டாவினாலோ அல்லது சிறு குண்டினாலோ ஏற்பட்டிருக்கும் என்று குறிப்பிடவில்லை. அ.சா.1, சுழல் துப்பாக்கி மற்றும் இரட்டை குழல் துப்பாக்கி ஆகிய பொருட்களை கைப்பற்றியதை தாம் காணவில்லை என்று ஒப்புக்கொண்டார். எந்த ஆயுதத்தின் காயங்கள் காரணமாக மரணம் விளைந்தது என்பதற்கான குறிப்பிட்ட சான்று ஏதும் இல்லாத பட்சத்தில், மேல்முறையீட்டாளரிடமிருந்து சுழல் துப்பாக்கி கைப்பற்றப்பட்டதன் பேரில் அவர்தான் அதற்கு காரணம் என்று கூறுமுடியாது.

13. 1ம் மற்றும் 2ம் குற்றஞ்சாட்டப்பட்டவரின் வாக்குமூலத்திலிருந்து, 1ம் குற்றஞ்சாட்டப்பட்டவரின் வீட்டிலிருந்துதான் சுழல் துப்பாக்கி கைப்பற்றப்பட்டது என்றும், அது ஒற்றை சுழல் துப்பாக்கியாகும் என்பது அரசுத்தரப்பின் வழக்காகும். அதேபோன்று சடலக்கூறுாய்வு சான்றிதழ் (அ.சா.ஆ.52)ல் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது போல், 2ம் குற்றஞ்சாட்டப்பட்டவரின் வீட்டிலிருந்துதான் இரட்டை சுழல் துப்பாக்கி கைப்பற்றப்பட்டது. அதில், குத்துக்காயம் இருந்ததாக குறிப்பிடப்பட்டிருந்தது. சடலக்கூறுாய்வு சான்றிதழில், சுடப்பட்ட காயமானது சுழல் துப்பாக்கியாலா அல்லது கைத்துப்பாக்கியாலா ஏற்பட்டது என்பது குறித்து குறிப்பிடப்படவில்லை. மரணத்தை விளைவித்த காயங்கள் சுழல் துப்பாக்கியாலா அல்லது இரட்டை சுழல் துப்பாக்கியாலா ஏற்பட்டது என்பது தெளிவாக குறிப்பிடப்படாதபட்சத்தில், மரணமுற்றவரான சோமிபென்னின் உடலில் மரணத்தை விளைவித்த சுடப்பட்ட காயங்களுக்கு மேல்முறையீட்டாளர் – 1ம் குற்றஞ்சாட்டப்பட்டவர் பொறுப்பாவார் என்று நீதிமன்றங்கள் தீர்மானித்திருக்கக் கூடாது.

14. அரசுத்தரப்பு வழக்கில் சந்தேகத்தை எழுப்பிய மற்றொரு சூழ்நிலை குறித்தும் குறிப்பிடப்பட வேண்டும். முக்கேஷ்குமார் பிரான்லால் சேத் (அ.சா.12) மற்றும் மதுசூதன்பாய் அரவிந்பாய் பாண்டியா (அ.சா.13) ஆகியோர் 1ம் மற்றும் 2ம் குற்றஞ்சாட்டப்பட்டவரிடமிருந்து ஆயுதங்களை கைப்பற்றியதற்கான பஞ்சநாமா (அ.சா.ஆ.79)ன் சாட்சிகளாவர், அவர்கள் இருவருமே அரசுத்தரப்பு வழக்கிற்கு அதரவு அளிக்கவில்லை. காவல்துறை அலுவலரான விசாரணை அதிகாரி, வெடிக்கும் ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டது குறித்து கூறியுள்ளார். காவல்துறை அலுவலரின் சான்றுரையில் சில உள்ளார்ந்த குறைபாடுகள் உள்ளன என்பதன் பேரில், அதை புறக்கணிக்க வேண்டும் என்பதான சட்ட விதிகள் ஏதுமில்லை. இரு ஆயுதங்களான அதாவது சுழல் துப்பாக்கி மற்றும் கைத்துப்பாக்கி ஆகியவை முறையே 1 மற்றும் 2ம் குற்றஞ்சாட்டப்பட்டவர்களால் பயன்படுத்தப்பட்டதாக கூறப்படுகின்ற தற்போதைய வழக்கின் சங்கதிகள் மற்றும் சூழ்நிலைகள், தனிப்பட்ட மூலத்திலிருந்து ஆயுதங்கள் கைப்பற்றப்பட்தை உறுதியூட்ட வேண்டும் என

செயலறிவு விதி கோருகிறது. பஞ்சநாமா சாட்சிகளான (அ.சா.ஆ.79) பிறல் சாட்சியாக மாறியிருக்கும் பட்சத்தில், ஆயுதங்களை கைப்பற்றியது குறித்து மற்ற மூலங்களிலிருந்து உறுதியூட்டும்படி நீதிமன்றம் கோரப்படுகிறது.

15. மேல்முறையிட்டாளருக்காக முன்னிலையான கற்றறிந்த வழக்கறிஞர், சுடப்பட்ட தோட்டக்கள் கைப்பற்றபடவில்லையென்றும், வெண்கலத்தால் செய்யப்பட்ட வெற்று தோட்டாக்கல் மட்டுமே மாமரத்தின் அருகே கைப்பற்றப்பட்டது என்று வாதுரைத்தார். இறந்தவருக்கு மரணத்தை விளைவித்த சுடப்பட்ட தோட்டாக்கள் கைப்பற்றப்படாததால், எந்த ஆயுதத்தின் துப்பாக்கி காயங்களால் இறந்தவர் மரணமுற்றார் என்பது குறித்து எறிபொறியியல் வல்லுநரால் குறிப்பிட்டு கூறமுடியவில்லை என்பதே மேல்முறையீட்டாளரின் வாதமாகும். எறிபொறியியல் வல்லுநர் சுழல் துப்பாக்கியான சி–1லிருந்து சுடப்பட்ட தோட்டக்காலான சி–2வை மட்டுமே ஆய்வு செய்ததாகவும், காலிதோட்டக்கள் மட்டுமே கைப்பற்றப்பட்டதாகவும் கூறினார், எனவே எறிபொறியியல் வல்லுநரின் சாட்சியத்திலிருந்து, மேல்முறையீட்டாளரிடமிருந்து கைப்பற்றப்பட்ட சுழல் துப்பாக்கியால்தான் இறந்தவருக்கு துப்பாக்கி சூடு காயம் ஏற்பட்டது என கூறமுடியாது என்று கற்றறிந்த வழக்குறைஞர் மேலும் வாதுரைத்தார். தோட்டக்களை கைப்பற்றாதது அரசுத்தரப்பு வழக்கிற்கு பாதகமானது என கூறுமுடியாது. நிகழ்விடத்தில் இருள் சூழ்துள்ளது மற்றும் மரணம் விளைவிக்கும் காயங்களை யார் ஏற்படுத்தினார் என்ற சந்தேகத்திற்குரிய மற்ற அம்சங்கள் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு சந்தேகத்தின் பலனை அளிக்கக்கூடியதாக இருப்பதால், எறிபொறியியல் வல்லுநர்களின் கருத்துறைக்கு முரணாக உள்ள வாதுரைகளின் நற்கூறுகளை பரிசீலிக்க நாங்கள் முற்படவில்லை.

16. சம்பவம் நடந்த சமயத்தில், நிகழ்விடத்தில் இருள் சூழ்திருந்ததால், தாக்குதல் செய்தவரை அடையாளம் காண சாட்சிகளுக்கு கடினமாக இருந்தது. மரணம் ஏற்படுத்திய துப்பாக்கி சூடு குறித்து கண்ணுற்ற சாட்சிகளின் சாட்சியத்தில் முரண்பாடுகள் இருந்தது. நியாயமான சந்தேகத்திற்கு அப்பால்,

குற்றஞ்சாட்டப்பட்டவரின் குற்றம் நிரூபிக்கப்படாததால், குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு சந்தேகத்தின் பலன் அளிக்கப்பட்டுள்ளது.

17. கீழமை நீதிமன்றங்களின் ஒருங்கியல்வான காண்முடிவுகளில் தலையிட உச்ச நீதிமன்றம் சுணக்கம் காட்டுகிறது என்பது எங்களுக்கு தெரியும். இந்திய அரசமைப்பு சட்டம் வகுமுறைக்கூறு 136 ன் கீழான மேல்முறையீட்டில், அது நெறிகோணியது (மகோஷ் தத்தாத்ரே தீர்துகர் –எதிர்– மகாராஷ்டிர மாநில அரசு (2009) 11 எஸ்.சி.சி 141) என்று காணப்படாதவரை, சங்கதிகளின் ஒருங்கியல்வான காண்முடிவுகளில் தலையீடு கோரமுடியாது. சான்றுகளை மதிப்பிட்டது பிழையானதாக இருந்தால், உச்ச நீதிமன்றம் கட்டாயமாக சான்றுகளை மதிப்பீடு செய்யும். எங்களது ஆழ்ந்த கருத்துப்படி, உயர் நீதிமன்றம் சான்றாவணங்களை ஆராய்து, அதை மதிப்பீடு செய்திருக்க வேண்டும். விசாரணை நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்றத்தின் காண்முடிவுகள் நெறிகோணியதாகவும், மேல்முறையீட்டாளரின் தரப்பிலான சான்றாவணங்களை முறையாக மதிப்பீடு செய்யவில்லை என காணப்பட்டாலும், உயர் நீதிமன்றம் மற்றும் விசாரணை நீதிமன்றம் ஆகியவற்றால் பதிவு செய்யப்பட்ட சங்கதிகளின் காண் முடிவுகளில் உச்ச நீதிமன்றம் கட்டாயமாகத் தலையிடும். உயர் நீதிமன்றமானது வாய்மொழி சாட்சியத்தையும், மற்ற சாட்சியத்தையும், 1ம் குற்றஞ்சாட்டப்பட்டவரான மேல்முறையீட்டாளரால் எழுப்பப்பட்ட எழுவினாக்களையும் மதிப்பிடவில்லை என்று சுட்டிக்காட்டப்பட்டது. எங்களது ஆழ்ந்த கருத்துப்படி, மேல்முறையீட்டாளர் 1ம் குற்றஞ்சாட்டப்பட்டவரின் தண்டனையை உறுதிசெய்கின்ற எதிர்பிற்குள்ளான தீர்புரையை நிலைநிறுத்த முடியாது என்றும், எதிர்பிற்குள்ளான தீர்புரை நீக்கரவு செய்வதற்குரியது என்பதும் ஆகும்.

18. இ.த.ச. பிரிவு 302 உடனிணைந்த இ.த.ச. பிரிவு 34 மற்றும் இ.த.ச. பிரிவு 307 உடனிணைந்த இ.த.ச. பிரிவு 34 மற்றும் ஆயுதங்கள் சட்டம், பிரிவு 25(சி) ஆகியவற்றின் கீழ் மேல்முறையீட்டாளர் – 1ம் குற்றஞ்சாட்டப்பட்டவரின்

தண்டனை தீர்ப்பு நீக்கரவு செய்யப்பட்டு, இந்த மேல்முறையீடு அனுமதிக்கப்படுகிறது. மேல்முறையீட்டாளர்/1ம் குற்றஞ்சாட்டப்பட்டவர்– அசோக்சின்ஹ ஜெயந்திரசின்ஹ, என்பவரின் முன்னிலை மற்ற எந்த வழக்கிலும் கோரப்படாதவரை, அவர் உடனடியாக விடுதலை செய்யப்படுகிறார் என்று உத்தரவிடப்படுகிறது.

மேல்முறையீடு அனுமதிக்கப்படுகிறது.

பொறுப்புத்துறப்பு

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கு பயன்படுத்திக்கொள்வதற்குட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப் பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும். "